உ

கணபதி துணை

துறைமங்கலம்

சிவப்பிரகாச சுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணி மாலை.

பெரியநாயகி விருத்தம், பெரியநாயகி கலித்துறை,

பிக்ஷாடன நவமணிமாலை

இந்நான்கும்

ஸ்ரீலஸ்ரீ

ஆறுமுகநாவலரவர்கள்

பரம்பரை

யாழ்ப்பாணம் மேலைப்புலோலி

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

மாணாக்கர் பார்வை.

சென்னை:

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது

19[illegible]0

நெ-24, தாண்டவராயப்பிள்ளைத் தெரு.

உ

கணபதிதுணை.

துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

நால்வர் நான்மணிமாலை

பெரியநாயகி விருத்தம், பெரியநாயகி கலித்துறை,

பிக்ஷாடன நவமணிமாலை

இந்நான்கும்

ஸ்ரீலஸ்ரீ

ஆறுமுக நாவலரவர்கள்

பரம்பரை

யாழ்ப்பாணம்-மேலைப்புலோலி

நா. கதிரைவேற்பிள்ளை அவர்கள்

மாணுக்கர் பார்வை.

சென்னை

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1930

உ

கடவுள் துணை

சைவசமயாசாரியர்களாகிய

நால்வர் நான்மணி மாலை.

காப்பு

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

வெண்பா

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞானப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. 1

கலித்துறை

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொ
வாட்டிற்கு வல்ல னொருவற்கு ஞான வமுதுதவி [து
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரெப் படியினுமே. 2

விருத்தம்

படியிலா நின்பாட்டி லாரூர
னனிவிருப்பன் பரமனென்ப
தடியனே னறிந்தனன்வான் றொழுமீச
னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்

தொடியுலா மென்கைமட மாதர்பா
னினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு
முழன்றமையால் விளங்கு மாறே. 3

அகவல்

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ
வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமெணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே. 4

வெண்பா

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. 5

கலித்துறை

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள் ளேறுடை
தனக்கன்புசெய்திருத் தாண்டகவேந்தவித் தாரணியி[யான்

னினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ நேசமுறு
மினர்க்கன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந்தே. 6

விருத்தம்

அறிந்து செல்வ முடையானு
மளகைப் பதியாற் றேழுமைகொண்
டுறழ்ந்த கல்வி யுடையானு
மொருவன் வேண்டுமென விருந்து
துறந்த முனிவர் தொழும்பரவை
துணைவா நினைத்தோ ழமைகொண்டான்
சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே. 7

அகவல்

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. 8

வெண்பா

இடுகாட்டுன் மாத ரெலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—நெடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புநின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. 9

கலித்துறை

கொள்ளைக்கதிர்முத்தின் பந்தருஞ்சின்னமுங் கொள்ளுமொரு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய்
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே. 10

விருத்தம்

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற் கூற்றுவனு [ய்
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டா
கோங்கமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. 11

அகவல்

கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக னறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண

முட்டாட் டாமரை முறுக்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு
நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே. 12

வெண்பா

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டுறையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. 13

கலித்துறை

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னூரறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னுணவ மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே. 14

விருத்தம்

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா
னூற்பக வன்னநுண் மருங்குல்
வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி
மாற்றுவான் சென்றன னென்றூற்
கோக்கலிக் கார்மன் வயிற்றிடைக் குத்திக்
கொண்டதே துக்குநீ புகலாய்

காக்கரு மதலை விழுங்கிய முதலை
கான்றிடத் தோன்றுநா வலனே. 15

அகவல்

வலமமு வுயரிய நலமலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுகந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த
திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. 16

வெண்பா

பயனுகு நல்லான் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு. 17

கலித்துறை

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் விறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே. 18

விருத்தம்

போத முண்ட பிள்ளை யென்பு
பொருகண் மாது செய்ததோ
காதல் கொண்டு சொல்லின் மன்னர்
கன்மி தப்ப வுய்த்ததோ
வாய்தி றந்து முதலை கக்க
மகனை நீய ழைத்ததோ
யாது நம்பி யரிது நன்றெ
னக்கி யம்ப வேண்டுமே. 19

அகவல்

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ
முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட னின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. 20

வெண்பா

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரேகமுவின்
காடேறப் புக்கவரு கர். 21

கலித்துறை

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே. 22

விருத்தம்

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றமு கின்றநா ளலைபா
றனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பி ரானலனே. 23

அகவல்

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று காலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னென்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வென்பணி வானே. 24

வெண்பா

வானும் புகழ்புகலி மன்னன் றெட்டர்பொன்று
தேனுந் திதழியோன் சீரேடு—தானுங்

கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து. 25

கலித்துறை

துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே. 26

விருத்தம்

அரசன் பரிமேல் வரநெடுநல்
யானை யெருத்தத் தமர்ந்துபோய்
வரதன் கைலை மலையடைந்த
மணியே மணிநீ ரிடுபசும்பொன்
றிரைசங் கெறியுங் குளத்துவரச்
செங்கற் செம்பொ னப்பாடும்
பரிசின் றெனக்குன் செம்பவளத்
திருவாய் மலர்ந்து பகர்வாயே. 27

அகவல்

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெறாரி னழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றார் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே. 28

வெண்பா

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டுப்பெற் முன்கொனீ—தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின். 29

கலித்துறை

பெற்று ரினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டே
னற்று ரணியி னினைப்போற் பிறப்பது நல்லகண்டாய்
செற்றூர் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரே
பற்று மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே. 30

விருத்தம்

பாவாய்ப் பொழிந்த வானமுதப்
பவளத் திருவாய் நம்பிநீ
சேவாய்ப் பொருதுந் தருமமுடைத்
தேவன் மலைக்குப் போம்பொழுது
காவாய்ப் பயந்த தடக்கைமலர்க்
கழறிற் றறிவார் கடாவிவரு
மாவாய்ப் பிறக்கக் கிடையாதே
மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. 31

அகவல்

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னீழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக

மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. 32

வெண்பா

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானே டேர்ந்தா னிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து. 33

கலித்துறை

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே. 34

விருத்தம்

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழுடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றானே. 35

அகவல்

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. 36

வெண்பா

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க—ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று. 37

கலித்துறை

உற்றா னலன்றவந் தீயினின் றானல னாண்புனலா
வற்றா னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்று துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. 38

விருத்தம்

பெருமிழலைக் குறும்பரெனும் பரம யோகி
பெரிதுவந்துன் றிருவடித்தா மரையைப் போற்றி
விரைமலர்தூய் வந்தனைசெய் கின்றா னென்றால்
விளங்கிழையா ரிருவரொடு முயங்கலாமோ
வுரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ னின்னை
யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயிற்
சுரர்முனிவர் பரவவுறும் பெருஞ்சீர்த் தொண்டத்
தொகைசெய்தோ யறமுதனல் வகைசெய் தோயே. 39

அகவல்

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. 40

தேவாரம் திருவாசகம் என்கிற தமிழ்வேதஞ் செய்தருளிய சைவசித்தாந்த சமயாசாரியராகிய நால்வர்களிலே திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசுநாயனாருக்குக் கட்டளைக்கலித்துறையும், சுந்தரமூர்த்திநாயனாருக்கு விருத்தமும், மாணிக்கவாசகசுவாமிகளுக்கு அகவலுமாகத் துறைமங்கலச் சிவப்பிரகாசசுவாமிகளருளிச் செய்த நால்வர்நான்மணிமாலை முற்றிற்று. திருச்சிற்றம்பலம்.

உ

அம்பிகை துணை.

திருமுதுகுன்றம்

பெரியநாயகியம்மை

நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன்
முக்கணுண் டகைநின தெழில்கூர்
முளம்புலர் தலைக்கண் டெல்வளந் தடியின்
முனைப்பிறைக் கோடுகொண் டுழுது
விழுமணி யரவ நுழைசடா டவியின்
விண்ணதித் தண்புனல் விடுப்ப
விரைவொடு குளிர்ந்து முகமலர் தலினுன்
மென்கொடி யெனநினை யுணர்ந்தேன்
செழுமணி நீல மழைமுகி றவழுஞ்
சிலம்பெனும் புற்றினின் றார்ந்து
திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத்
தினமணி யெனப்படுஞ் செங்கேழ்
கெழுமணி யுமிழ்ந்து பேரிரு டொந்து
கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 1

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி
வெற்புவேண் டுருது தன் மருகன்
மேவெலா மெலும்புந் தோலுமாய்க் கிடத்தல்
வெறுத்திடா திளமைநா டாது
பழமலை தனக்குச் சாதியொப் பெனவே
பார்த்துனைக் கொடுத்ததுன் றந்தைப்

பனிமலை யென்னே தன்மனை யாட்டி
பயந்திடப் பெருமக ளென்றே
கழைவரை முன்ன ரூன்றுபு நடந்து
கடிதுபள் ளங்களின் வீழ்ந்து
கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க்
கடையுற வளைந்துருத் திரைந்து
கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக்
கீர்த்திமு வுலகினும் போர்ப்பக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 2

காமமென் கின்ற கதுவவெர் தீயுங்
கடுஞ்சின மெனப்படு புலியுங்
களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக்
கறையடிக் களிநல்யா னையுமே
தாமிகு மெனது மனமெனும் வனத்திற்
றனிவரல் வெருவினை யாயிற்
றழலினின் ருடிப் புலிகரி யுரிபோர்
தடுத்தவாண் டுணையொடும் வருவா
யீமவெள் ளெனும்பிங் கிடப்படு மெனத்தா
னெனும்பணி கடவுண்மா நதியா
யிருந்துநல் லன்னங் கொண்டுமெய் வெளுப்ப
விணைதரு கங்கையை யிகழ்ந்து
கீழ்மைசொல் கின்ற தொன்றுமின் ருயிற்
கிடைக்குமோ விதன்குண மென்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 3

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான
சொரூபியென் றருமறை யனைத்துஞ்

சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்தேன்
சுரந்தநின் றிருமுலைச் செழும்பால்
வட்டிலிற் கொச்சைப் பிள்ளைமுன் னுண்டு
வண்புகழ் ஞானசம் பந்த
வள்ளலென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோன்
மையறீர் செய்யுள்செய் தமையா
லெட்டிநற் றிகிரி பறித்தெறிந் தாற்கா
ரியானையை யுருட்டிவாங் குதிரை
யெறிந்துசங் கதிர்த்துக் கொடிமர முறித்திட்
டெதிர்ந்திடற் றமைவிடுத் தோடிக்
கிட்டினார்ப் புரட்டி முருகவேள் பூதக்
கிளைப்பெரு வெள்ளமொத் தெழுந்து
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 4

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா
முறுகுழி மேடுக ணிரவி
யொழிவிலா வாய்மை மெழுக்கினுற் பூசி
யுயர்தரு மனமெனப் படுமோர்
பள்ளிமென் றவிசி விருத்திநின் பதியைப்
பழுதில்யா னெனப்படு நெல்லைப்
பழமல மாயைத் தவிடுமி போக்கிப்
பாகஞ்செய் தென்றருத் திடுவாய்
துள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர்
சூழல்வெண் மணய்க்குட முருட்டித்
துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த்
தோய்ந்துநின் முடிளங் கயற்கட்
கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக்
கேடில்சீர்க் கண்ண னுடதல்போற

கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 5

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு
நல்கிய தந்தையுந் தாயு
நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே
நவின்றவம் முறையுளீர் நீவிர்
பாடியா ரணஞ்சொ லீண்டுமாய் வனதீரம்
பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப்
பழமலை தனது பெயர்வலக் காதிற்
பகர்ந்தருள் செயப்பெருஞ் செயலா
லோடியோர் காக மேறுபு கவிழ்த்த
வொருசிறு கரகநீர் தானு
மொருவனோர் செவியால் விடுத்தவப் புனலு
முமையொரு பாகர்கட் டோன்றிக்
கேடிலா னந்த வுருவமா மெனையொக்
கின்றன வோவென வதிர்த்துக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 6

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர்
தனயன்வா கனத்தினை விரும்புந்
தண்மணிப் பணியு மதனையுள் வெருவித்
தான்வள ராமதி யமும்வாழ்
மின்னவிர் சடையான் றனையினை யன்றி
மேவுவா னவரைநெஞ் சென்னல்
விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து
வெறுமணி கொள்ளுமா றன்றே
மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி
மகபதி மலரயன் மறலி

வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர்
மாதவர் விஞ்சைய ரசுரர்
கின்னர ருரகர் மூழ்குபே ரரவங்
கேட்டொரு முராரிபாய் சுருட்டக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 7

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப்
பாவியேன் மனத்தினும் வலிய
பன்மணி குயின்ற செம்பொனம் மியினின்
பதமலர் வைத்தக லாம
விடத்தினி லணைவைத் தருளுதன் முன்னே
விளைப்பட்கை மனைவியைப் பிரந்தா
ளிளம்பிறை சூடி மிறையவன் பின்ன
ரெங்ஙனம் போயிரந் திடுவான்
கொடுததெனி விடுபொான் புலவனுக் காரூர்க்
குளத்தினிற் பழமலை யன்று
கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற்
குளித்தகல் பவர்குளத் தெல்லாங்
கிடைத்திட வொருகண் டருமெனக் கிதுசெய்
கின்றதற் புதங்கொலோ வென்னக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 8

பண்டுநின் கொழுநன் றந்தையுந் தாயும்
பயந்ததம் மருமருந் தன்ன
பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும்
பாதக மொன்றுளங் கொண்டு
தொண்டர்தம் மனையிற் செல்வனென் றெழுநின்
சுதனழப் பொருதுநின் முலைப்பால்

சுரந்தமு தூட்டு மன்னைநீ யர்வாய்
தொழுதுபோய்ப் பிரித்திலை யென்னே
வண்டர்தங் கங்கை யன்னமங் கதன்க
ணுடல தன்னைவங் தடையா
வாடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா
லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து
கெண்டையொண் வாளை யுடனெழக் குதிப்பக்
கிளைவளைக் கமுகின்மேற் றவழக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 9

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம்
புலியினைச் சிறப்புலி யொடுகே
புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப்
புலிபனி மலையிள மானைப்
பரிவுறத் தொழுது மருவிய வுதனூற்
பயமறச் சாதிக டனது
பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து
பசுவெலா மருவுறப் பெறுமே
சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த்
துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத்
துணைவிமுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ்
சுடர்மணிக் கட்செவிப் பணியான்
கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன்
கிளக்குமேற் புகழென் றோன்றிக்
கிளர்மணி முத்த நதியுடை விருத்த
கிரியமர் பெரியநா யகியே. 10

திருச்சிற்றம்பலம்.

பெரியநாயகியம்மை கலித்துறை.

இறைவற்குத் தக்க விறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற நெற்கொண் டுலகேற் றுனைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே. 1

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துகொடுஞ்
சித்தர்க் க[illegible]நின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல் [ன்
வைத்தற்[illegible]மெண்ணி மதியுடையே னென்பன் வார்சடையா
பித்தர்க்குத் தங்குண[illegible]நாலினுஞ் செம்மை பெரியம்மையே.

இழைபொறுத்[illegible]ற்பொறை தானென்பரானல் விசைப்புலவர்
மழைபொறுத்[illegible]னன் முகக்காற் பொறுக்கும் வழக்கதுண்டே
யுழைபொறுத[illegible]நல்லியுற்பகையார்மனைக்குற்றவொரு [யே.
பிழைபொறுத்தாயநன்று காண்குன்றைவாழும் பெரியம்மை

கையன்று தாமரை கண்ணன் றிளமென் கயலெனவே
பொய்யன்று கங்கையை[illegible]ரென்று சாதிப்பர் போர்விடையார்
மெய்யென்றுநீ[illegible]ண் டிரேலறலாயினென் மென்கையிடைப்
பெய்யென்று பின்னை யறிவாய்தென் குன்றைப் பெரியம்மையே. 4

பொன்வா[illegible] செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி
னன்வாங்கு கோடு கிழிக்கு [illegible]குவெண் டலைபடுங்கன்
முன்வா[illegible]மெந்தைநின் பாதாம் புயத்தின் முடிவணங்கிற்
பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை வாழும் பெரியம்மையே.5

கடிநறு மென்றரு மீதி[illegible] பாரெனக் கங்கை யென்பாண்
முடிநடு வேறி யிருப்[illegible]தன[illegible] வேனின் முதிர்விலத
னடியடை வாரெனச் சங்கர[illegible] பாங்க ரமர்ந்தனைநீ
பிடிநடை யேகுயி லேகுன்றை வாழும் பெரியம்மையே. 6

நின்போ விலரா ருள[illegible]ரென் றேசொல நின்கொழுந
னென்போ னொருவ[illegible] மகன்பூங் கழுத்தினை யிர்வலென்றே

யன்போர் சிறிது மிலனுகப் போக வதற்கிசைந்து [யே.
பின்போய் விடாதுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மை

செச்சை மலர்புரை வாஞேடு மேனி திறந்துகொண்டு
கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப்
பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும்[மையே
பிச்சை யொழிகென் றொருவார்த்தை சொல்லெம் பெரியம்

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுகற்கில்லை
யோதிற் பிறசொன வச்ச முரும வுயிர்களெல்லா
நீதிப் புதல்வர்க ளாயின வாதலி[illegible]கொள்கற்புப்
பேதிப்ப தன்றுகண் டாய்குன்றை வாழும் பெரியம்மையே.

நின்னேய நாயக [illegible]ன்றிருப் பாய்நினை ந[illegible]தகன்று [லாஞ்
தன்னேரில் பூவணத் தேயன்று போய்ச்செய்த தன்மையெல்
சொன்னேனவேனினி நின்னேடெ[illegible]ப்பதேன் சொல்லுவன்யான்
பின்னே தெனக்குத் தருவாய்தென் குன்றைப் பெரியம்மையே. 10

நற்றவத் துன்னைப் பெறுமலைக் கென்னமு[illegible] னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெனும்பே யணியு[illegible]பழமலைதான்
சற்றெனக் கையந் தராதுசொன் னும்மலைச் சா[illegible]புள்ளே
பெற்றவர்க் கென்ன முலைவிலை குன்றைப் பெரியம்மையே.11

கற்று ரறிகுவர் மக்கடம் பேறெனக் கட்டுரை[illegible] [கி
சொற்று ரொருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுல
னற்றுண் மகற்பெறு கென்றுசி செ[illegible]பவர் நாணவுனைப்
பெற்றுன் மலையரை யன்குன்றை வாழும் பெரியம்மையே.12

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துழைக் கன்றொடுமோ
ரரிய முடியம் புலியொடு மே[illegible]ளை யாடுகின்றாய்
தெரிய வரிய பதினு லுலகுமென் சிற்[illegible]லென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப் பெரியம்மையே.13

தண்ணு ரிதழி புனைவான் விழியிணை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் றேநின் றிருமுக பங்கயத்திற்
கண்ணு யினருனக் கவ்வலை மாதுங் கலைமகளும்
பெண்ணு ரமுதனை யாய்குன்றை வாழும் பெரியம்மையே.

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பான்மெல் விரனுதியாற்
றெள்ளித்து[illegible]யள் வாயினுங்தொட்டுத் தெறித்திலையுன் [யே
பிள்ளைக்[illegible] கிள்ளைக்கும் பால்கொடுத்தாலென் பெரியம்மை

ஆருத் துயர்கொண் ட[illegible]யேன் சலிப்ப வதுசெவியி
லேறும லையிருந் தாயிலனெசெய் வேனெங்க ளீசற்கொரு
கூறுகி யண்[illegible]லா யிளமை குலவுதவப்
பேறுகி வாழ்ப[illegible]ளேகுன்றை வாழும் பெரியம்மையே. 1[illegible]

[illegible]னைமாட்[illegible]ன்சொன்றைத் தாரோன் றருமிரு நாழிநெல்லால்
வினைமாட்சி கொண்யெி றெல்லா மளித்தருண் மேன்மையினன்
மனைமாட்சி யெய்து முல[illegible]க்கே பெருங்கற்பு மாட்சியன்றிப்
பினைமாட்சி யார்க்[illegible]ண் டுலகின்ற குன்றைப் பெரியம்மையே

நெடிய வில்[illegible]க லொருசிலை யாக்கிய நின்பதிமேற்
கொடிய வ[illegible]கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்ந்த
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநுடப்
பிடியு ளட[illegible]ய தென்னிது குன்றைப் பெரியம்மையே. 18

பண்டகு வீணை யொடு[illegible]ட வந்தவப் பாமடந்தை
கண்டழு மாறு[illegible]திநிரை[illegible]பாலக் கவின்கனியும்
வெண்டலை மாலை கிட[illegible]ந்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி நீகுன்[illegible]ற வாழும் பெரியம்மையே. 19

திருச்சி[illegible]றம்பலம்.